2nd September 1959]

SRI N. K. PALANISAMI : இந்தக் கோவில் நிலங்களை ஏலத்தில் விடுவதற்குப் பதிலாக நேரடியாக பூமியை பயிரிடுகிறார்களே அந்த குத்தகைதாரர்களுக்கு பூமியைக் கொடுத்து கோவாப்ரேடிவ் முறையில் சாகுபடி செய்வதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன்.

Temple funds

* 82 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre regarding the constitution of a committee to find out the ways and means to prevent unauthorised expenditure in temples and mutts funds; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Iswaran Koil Manyam at Kalambur

* 83 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், களம்பூர் ஈஸ்வரன் கோயில் மானியத்தை (தோப்பு) விற்றுவிட சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்களா ?

(ஆ) அதில் எத்தனை குடும்பங்கள் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்கின்றன ?

(இ) அவர்களை வெளியேறும்படி உத்திரவிடப்பட்டுள்ளதா ?

(ஈ) அந்த மானியத்தை அதில் குடியிருப்பவர்களுக்கும், வீடு, நிலமில்லா ஏழைகளுக்கும் இனாமாகப் பிரித்துக்கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Thirteen families.

(*c*) Action is being taken to evict them.

(*d*) No, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்த நிலத்தில் குடியிருக்கும் ஏழைகளுக்கு இனாமாக தராவிட்டாலும்கூட, அந்த நிலங்களை விலை நிர்ணயம் செய்து அந்த நிலத்தை அவர்களுக்கே விலைக்குக் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சம்பந்தப்பட்ட இலாக்காவைப் பொறுத்தமட்டில் ஆலயத்தில் வருமானம் இல்லையென்றால் விற்கவேண்டுமென்று அனுமதி கேட்டால் அதற்கு கொடுக்கப்படுகிறது. ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதென்றால் வேறு இலாக்காவின் மூலம், அக்கொயர், செய்வதற்குக் கேட்டுக்கொள்ளலாம்.